ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1902/47 - 2015 පෙබරවාරි මස 20 වැනි සිකුරාදා - 2015.02.20

1902/47 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

கட்டளை இல. 30

### 2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம்

### 20(5) ஆம் பிரிவின் கீழான கட்டளை

2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 20(5) ஆம் பிரிவினால் உரித்தளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் செயற்படுகின்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையானது, உற்பத்தியாளர், இறக்குமதியாளர், பொதியிடுவோர், விநியோகஸ்தர் அல்லது வியாபாரிகள் எவரும் கீழே நிரல்படுத்தப்பட்ட வகுப்புப் பெயரை மற்றும் ஏதேனும் வியாபாரப் பெயரைக் கொண்டுள்ளதுமான 50 கிலோ சீமெந்து பொதிகளை ஆகக் கூடுதலான சில்லறை விலைகளுக்கு மேலாக விற்பனை செய்யவோ விற்பனைக்குவிடவோ அல்லது விற்பனைக்கு கோரவோ அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ முடியாதெனக் கட்டளையிடுகின்றது.

| வகுப்புப் பெயர் | ஆகக்கூடிய சில்லறை விலை (50 கிலோ பொதியொன்று) ரூபா |
|---|---|
| சாதாரண போட்லண்ட் சீமெந்து | 840 |
| போட்லண்ட் லைம்ஸ்ரோன் சீமெந்து | 840 |
| மேசனறி சீமெந்து | 840 |

இக்கட்டளை 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 20 ஆந் திகதியிலிருந்து அமுலுக்கு வருகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

ரூமி மர்சூக்,
தவிசாளர்.

கொழும்பு,
2015, பெப்புருவரி 19.

03-166



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.